உ
சிவமயம்



அமரர்

# வையாபுரி இராஜராஜேஸ்வரன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்



05-03-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கொழும்பு வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர்.வையாபுரி இராஜராஜேஸ்வரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

05-03-2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ
சிவமயம்

எமது அன்புத் தந்தையின்
திருப்பாதங்களுக்கு இந்நூல்

# சமர்ப்பணம்

அன்பும், அருளும் நிறைந்து,
அக அறிவினால் மிளிர்ந்து,
ஆதரவாய் குடும்பம் காத்து,
பேரன்புடன் அரவணைத்து, எம்மை
வளர்த்து ஆளாக்கி, வையத்துள்
வாழ்வாங்கு வாழ வைத்த
எம் அன்புத் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்தித்து, இம்மலரை தங்களது
பாதக் கமலங்களில் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.




இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணுலகில்
15.11.1943

விண்ணுலகில்
04.02.2022

கொழும்பு வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும்
கந்தர்மடத்தை வதிவிடமாகவும்
தற்போது கொழும்பில் வசித்தவருமான

# அமரர் வையாபுரி இராஜராஜேஸ்வரன்

## திதி வெண்பா

ஆண்டு பிலவ தை இருபத் தொன்றில்
பூண்ட வளர்மதி திருதியையில் - நீண்ட
புகழின் இராஜராஜேஸ்வரச் செம்மல் மேலாம்
சிவபதம் அடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## விநாயகர் துதி



திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டும் - செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே.

(சம்பந்தர்)

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

(அப்பர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தாப்பிறை சூடிப்பெரு மானேயருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டறையுள்
அத்தா வுனக்காளாயினி யல்லே னெனலாமே.
(சுந்தரர்)

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய்
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக்கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழறஉழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பெருங் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்துவாள் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையின் தனிப் பெருங்கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமற் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் - தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் - குமரேசா
கறையானுக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். வையாபுரி இராஜராஜேஸ்வரன் அவர்களின் வாழ்க்கைப் பதிவுகள்

கொழும்பைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய வையாபுரி இராஜராஜேஸ்வரன் அவர்கள் 1943ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முதல் அதிபர் பிறவுண் சின்னத்தம்பி அவர்களின் வம்சாவழியில் வந்தவராவார். சின்னத்தம்பி வள்ளியம்மா தம்பதி களின் மகன் வேலுப்பிள்ளை. வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதி களின் மகனான ஓங்காரவடிவேல் காவேரி அம்மா தம்பதிகளின் மகனே வையாபுரி அவர்கள். அமரர் திரு.இராஜராஜேஸ்வரன் அவர்கள் வையாபுரி சேதுபதி தம்பதிகளின் மகனாவார்.

இவர் தனது 5 வயது வரை தாய் தந்தையுடன் சந்தோசமாக இருந்தார். தனது ஐந்தாவது வயதில் தாயை இழந்த இவர் பேரன் பேத்தியுடன் வளர்ந்து வந்தார். அவர் தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு இந்துக் கல்லூரியில் கற்றார். பின்பு தனது தகப்பனுடனும் சிறிய தாயாருடனும் தங்கச்சியுடனும் சிறிது காலம் மன்னாரில் உள்ள பாப்பாமோட்டையில் வாழ்ந்து வந்தார்.

அதன் பின்பு 1953ஆம் ஆண்டு கல்வியின் நிமித்தம் மீண்டும் கொழும்பு வந்து பேரன் பேத்தியுடன் தங்கியிருந்து கொழும்பு இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். 1958ஆம் ஆண்டு கொழும்பு கலவரத்தின் போது தனது குடும்பத்துடன் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திற்கு வந்து குடும்பத்துடன் தங்கியிருந்து யாழ் மத்திய கல்லூரியில் தனது கல்வியைப் பூர்த்தி செய்தார். கல்வி கற்கும் காலத்தில் சிறந்த விளையாட்டு வீரனாகவும், துடுப்பாட்டம் மற்றும் சாரணர் குழு அங்கத் தவராகவும் பல ஆண்டுகள் இருந்து வந்துள்ளார். 1959ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/மத்திய கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து 36 மணித்தியாலங்கள் துவிச்சக்கர வண்டியில் ஓடிச் சாதனை படைத்தார். பலரது பாராட்டுக் களையும் விருதுகளையும் பெற்றார்.

அதன் பின் திருக்கேதீஸ்வரத்தில் தகப்பனாருடைய தபாலகத் தில் அவருடன் உதவியாளராக இருந்தார். அத்துடன் அவர்களுடைய மாளிகைத்திடல் கமத்தையும் பார்த்துக் கொண்டார்.

திருமணப் பருவத்தை அடைந்ததும் கொக்குவிலைச் சேர்ந்த முத்துத்தம்பி பரமேஸ்வரியின் மகள் ஜெகதீஸ்வரியை 1969ஆம் ஆண்டு திருமணம் செய்தார். அவர் முத்தான மூன்று பிள்ளைகளைப் பெற்றார். 1979ஆம் ஆண்டு அரசாங்க உத்தியோகம் கிடைத்தது. பின்பு இன்னும் மேலாக 1981ஆம் ஆண்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி கிடைத்தது. நிறைய புதிய முயற்சிகள் செய்து அதில் நன்மைகள் பலவும் கண்டு கொண்டார். யாழ்ப்பாணம், மருதங்கேணி, சாவகச்சேரி, மன்னார், நானாட்டான், மடு ஆகிய பிரதேச செயலகங்களில் சிறந்த சேவையை ஆற்றியுள்ளார். பலருடைய பாராட்டும் பரிசுகளுக்குமுரியவரானார். கிராமத்தில் உள்ளவர்களுக்கு R.D.O என்றால் மிகவும் பிரியம். 2003ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ஆம் திகதி மன்னாரில் ஓய்வு பெற்று அதனைத் தொடர்ந்தும் 2003ஆம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டுவரை வேலை நீடிப்பில் இருந்து ஓய்வு பெற்றார்.

தனது பிள்ளைகளையும் கற்பித்து நல்லவர்களாக்கினார். மூத்த மகன் இந்திரஜித் பொதுச்சுகாதாரப் பரிசோதகராக யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுகிறார். இவர் இணுவிலைச் சேர்ந்த கனகரத்தினம் பரமேஸ்வரியின் இளைய மகள் மங்களேஸ்வரியைத் திருமணம் செய்தார். இதன் பேறாக மதுராங்கி, சங்கீர்த்தனன் என்ற பேரப்பிள்ளை களைப் பெற்றார். மதுராங்கி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வெளிவாரி யாக வர்த்தகப்பிரிவில் கல்வி கற்கின்றார். சங்கீர்த்தனன் யாழ்ப்பாண மருத்துவபீட 1ஆவது வருட மாணவனாகக் கல்வி கற்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகன் கஜேந்திரஜித் லீலா எக்ஸ்போட் மேற் பார்வையாளராக கொழும்பில் கடமையாற்றுகிறார். இவருக்கு நல்லூரைச் சேர்ந்த பரமசாமி இந்திராணியின் மகள் சியாமளாவைத் திருமணம் செய்து வைத்தார். இதன் பேறாக சாம்பவி, சஞ்ஜெய் என்ற பேரப்பிள்ளைப் பெற்றார். சாம்பவி கொழும்பு சைவமங்கையர் கழகத்தின் 2021ஆம் ஆண்டு உயர்தர மாணவியாவார். சஞ்ஜெய் கொழும்பு இந்துக்கல்லூரியில் 2023ஆம் ஆண்டு உயர்தர மாணவனாகக் கல்வி கற்கின்றார். சாம்பவி மரஜன் பொறியியலாளராகக் கடமையாற்றும் நிருபனை மணம் முடித்து இனிது வாழ்கின்றனர்.

மூன்றாவது மகளான பிறிந்தாவை சொந்த மைத்துனர் சிறிவிக்கினேஸ்வரன் சிவனேஸ்வரியின் மூத்தமகன் (மனநல வைத்திய நிபுணர்) Dr.நகுலேஸ்வரனுக்குத் திருமணம் முடித்து வைத்தார். இதன் பேறாக அபிஷேக், அப்சரா என்ற பேரப்பிள்ளைகளைப் பெற்றார். இவர்கள் தற்போது லண்டனில் வசிக்கின்றனர். அபிஷேக் பொருளாதார உயர்கல்வியை இலண்டன் பல்கலைக்கழகத்தில் கற்கின்றார். அப்சரா Yarm School UKயில் கல்வி கற்கின்றார்.

இராஜராஜேஸ்வரன் அவர்கள் 2008ஆம் ஆண்டு பங்குனி மாதத்திலிருந்து பிரமிட் எயார் ரவல் ஏஜெண்டில் காசாளராக வேலை செய்து வந்தார். அவரின் வாழ்வில் மிகவும் சந்தோசமான நாட்கள் அவை. 2020ஆம் ஆண்டு பங்குனி மாதம் 77 வயது வரையும் வேலை பார்த்தார். முதுமை மற்றும் நோய் காரணமாக ஓய்வு பெற்ற போதும் இன்று வரை அவருடன் பணியாற்றியவர்கள் இப்பொழுதும் அவரின் மனைவிக்கு உதவி செய்கிறார்கள்.


அமரர் இராஜேஸ்வரன் 78 வருடங்கள் நிறைவாழ்வு வாழ்ந்து அன்பகலா மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரியுங் காலம் வர 04.02.2022இல் இறைபதம் அடைந்தார். அவரது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாருடன்




சிறு வயதுத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1959ஆம் ஆண்டு யா/மத்திய கல்லூரியில்
தொடர்ந்து 36 மணித்தியாலங்கள்
சைக்கிள் ஓட்டிய சாதனை




சாரணராக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் - 1969





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருமணம்



மனைவி, பிள்ளைகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கடமையிலும்,
பொது நிகழ்வுகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



50ஆவது திருமண நாளில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன்



மனைவி பேரப்பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியின் உள்ளத்திலிருந்து...

எனது கணவரைப் பற்றிச் சொல்வதற்கு வார்த்தைகளும் இல்லை. எழுத்திலும் அடங்காது. உணர்வு பூர்வமாகத்தான் அறிய வேண்டும். இப்படி ஒரு அன்பான கணவரை அடைவதற்குப் பெரும் பாக்கியம் செய்திருக்கிறேன். அதற்குக் கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். அவர் தனக்கென சில கொள்கைகள் வைத்திருக் கிறார். அதைத் தாண்டி வரமாட்டார். எல்லோரிடமும் அதிகம் பேச மாட்டார். பழக மாட்டார். தனக்குப் பிடித்தவர்களிடம் அன்பாகப் பழகுவார். என்ன உதவி கேட்டாலும் செய்து கொடுப்பார்.

அவரின் கொள்கையில் பிரதானமானது பணத்தை வீணாக்கு வதும் நேரத்தை வீணாக்குவதும் பிடிக்காது. பிள்ளைகளிடம் எதுவும் வாங்கக்கூடாது, ஆனால் அவர்களுக்கு இயன்றளவு உதவி செய்ய வேண்டும் என்பதாகும்.

எங்கள் திருமணம் 1969ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 19ஆம் திகதி நடைபெற்றது. அப்போது எனக்கு வயது 21. அவருக்கு 26 வயது. அவரின் குடும்பமானது அப்பாவும், சிறிய தாயாரும். தங்கச்சியும், தகப்பன் வழிப்பேர்த்தியுமான ஒரு சிறிய அன்பான குடும்ப மாகும். அவர் தங்கையிடம் நிறையப் பாசம் கொண்ட ஒரு அண்ணனாவார். அவர்களுடன் நானும் அவரும் சந்தோசமாக வாழ்ந்து வந்தோம்.

எங்களுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் பிறந்தனர். எனக்கு அன்பான கணவராகவும், என் பிள்ளைகளுக்கு அன்பான தந்தையாகவும் அரவணைத்து வாழ்ந்து வந்தார். அவருக்கென்று ஆசையோ, விருப்பு வெறுப்போ இல்லாமல் எங்களுக்காகவே வாழ்ந்து 3 பிள்ளைகளையும் வளர்த்துப் படிப்பித்து. அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவி செய்து, அவர்களுக்குத் திருமணமும் செய்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மூலம் கிடைத்த எங்கள் பேரப்பிள்ளைகளைக் கையில் அரவணைத்து கொஞ்சி மகிழ்ந்தார். பின்பு மூன்று பிள்ளை களின் மகள்மாரின் பூப்புனித நீராட்டு விழாவினைக் கண்டு களித்து, இளைய மகன் வழிவந்த பேர்த்தியின் திருமணத்தையும் கேட்டு சந்தோசம் அடைந்தார். அவர் தனது 60 வயதில் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தராக (RDO) இளைப்பாறி, தொடர்ந்து 3 வருடங்கள் அதே சேவையில் கடமையாற்றினார். பின்பு 2008ஆம் ஆண்டு தொடக்கம் PIRAMID TRAVEL (Pvt) Ltd எனும் ஸ்தாபனத்தில் 13 வருடங்கள் சேவையாற்றிய நிலையில் தனது 77 வயதில் நோய் காரணமாக இளைப்பாறினார்.

பின்பு வைத்திய சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் சென்ற போது தனது மூத்த மகனினதும் மருமகளினதும் பராமரிப்பில் இருந்து நோய் சுகமானதும் தான் கொழும்புக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டார். இருவரும் கொழும்பு வீட்டில் வந்து மூன்று மாதங்கள் சுகமாக வாழ்ந்து வந்தோம். பின்பு நோயின் தாக்கம் காரணமாக இளைய மகனும் மருமகளும் தேவையான நேரங்களில் உதவி செய்தனர். கடைசி நேரத்தில் மகளைப் பார்க்க ஆசைப்பட்டதும் கொரனா கால கட்டத்திலும் மருமகன், மகளையும், பேர்த்தியையும் கூட்டிக்கொண்டு வந்து 15 நாட்கள் மகள் பக்கத்தில் இருந்து தன் கடமைகளைச் செய்து, வெளிநாடு சென்றனர்.

ஒரு மாதத்தின் பின் அவருக்கு நோயின் தாக்கம் அதிக மாகியது. இறுதிக் காலகட்டத்தில் இளைய மகனின் பராமரிப்பிலும் எனது பராமரிப்பிலும் இருந்து ஒரு நள்ளிரவில் இளைய மகன் அருகே இருக்கும்போது அவரின் ஆத்மா இந்த உலகை விட்டுப் பிரிந்தது. அவருடன் நான் 52 வருடங்கள் முழுமையான வாழ்க்கையை வாழ்ந்தேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**- மனைவி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தங்கை (தங்கச்சி) எழுதுவது,

அண்ணையின் வாழ்க்கைப் பயணத்தில் அவருடன் பயணித்த பல ஆண்டுகளில் சிறு வயதினில் நிகழ்ந்தவற்றை என்றும் மறக்க முடியாது. அவர் அன்பாக "தங்கச்சி" என்று ஓயாமல் அழைப்பார். பின் எனது நெருங்கிய உறவினர்களும் செல்லப் பெயராக தங்கச்சி என்றழைப்பர். பாடசாலை நாட்களில் தினமும் அண்ணை என்னைப் பாடசாலைக்குத் தனது துவிச்சக்கரவண்டியில் கூட்டிக்கொண்டு போய் விட்டிட்டுத்தான் கல்லூரிக்குப் போவது வழக்கம். எனது கல்வி நடவடிக்கையில் மிகவும் அக்கறை செலுத்தினார்.

எனக்குத் திருமணமாகிய பின்பும் எனது புகுந்த வீடு அண்மையில் இருந்தபடியால் அடிக்கடி வந்து சுகம் விசாரித்து. தேவைகள் ஏதும் இருந்தால் செய்து தருவார். எனது வீட்டின் முக்கியமான வைபவங்களில் முன்னின்று பொறுப்பாகவும், சிறப் பாகவும் செய்வார் என்பதைப் பெருமையுடன் பதிவு செய்கிறேன்.

மேலும் நாட்டுப் பிரச்சினை காலத்தில் நாம் இடம்பெயர நேரிட்ட போது என்னையும் பிள்ளைகளையும் பாதுகாப்பாகக் கூட்டிச் சென்று கொடிகாமத்தில் பாதுகாப்பான வீட்டில் அமர்த்தினார். இதனை என்னால் என்றும் மறக்க முடியாது. அண்ணை உத்தியோகபூர்வ மாகவும் சேவை செய்வதில் எதையும் ஒழுங்கு செய்து தலைமை தாங்கக்கூடியவர்.

**அன்பின் தங்கை**
**திருமதி.க.இராஜராஜேஸ்வரி**
**(தங்கச்சி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமுள்ள அப்பப்பா

பாசத்துடனும் வாஞ்சையுடனும்

பார் புகழும் வண்ணம் எங்களை

அனுதினமும் அழைத்து

அன்புடன் பல கதைகள் கதைத்து

மனமுருக அழைத்து

மகிழ்ந்த அப்பப்பா!

நீங்கள் இறந்தது பெரியதொரு இழப்பாக

எங்களுக்குக் காணப்படுகிறது.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பேரப்பிள்ளைகள்**
**மதுராங்கி, சங்கீர்த்தனன்**
**சாம்பவி + நிருபன்,**
**சஞ்ஜெய்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ammappa

My Ammappa had a nickname for me. Apu. I can still hear him calling for me as I ran around the house in Colombo or when we were talking on Face Time across the world. He was the most active man I knew. Always running from one place to another, making sure no one else had to do any work. This was because he was selfless, always wanting to make everyone around him happier and more comfortable.

Every time we visited Sri Lanka, he made sure the fridge was full of my favourite food and drinks, and he always remembered what they were. I will miss him dearly, as he was always there for me, whether it was to remind me to take my vitamins or to tell me that he believed in me and knew I would do well, whatever problems faced me. Ammappa was one of the most important people in my life, and someone's love that I will always cherish. Even if he's no longer here in person, I know he will be watching over me and guiding me through life as he has always done. I will miss you Ammappa.

**Love from Abi (Apu)**

I will always cherish the memories I have with my grandfather. From feeding me food when I was a child, to letting me practice makeup on his face, I adored every second of time I spent with him. Although we cannot see his smiling face, nor hear his voice anymore, deep down in our hearts, he has not left us, because his memory still lives on in all of us who loved (and will always love) him.

**Love from Pinky**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த சமூக சேவையாளர்
# அமரர் திரு.வை.இராஜராஜேஸ்வரன்

அமரர் திரு.இராஜராஜேஸ்வரன் அவர்களைப் பலகாலம் யான் அறிவேன். நான் தென்மராட்சியில் சேவையாற்றிய காலத்தில் ஏறக்குறைய 10 வருடங்கள் என்னுடன் சேவையாற்றினார். ஓர் சிறந்த பண்பு, உற்சாகம், கண்ணியம், கடமையுணர்வு, அன்பு, இறைபக்தி உள்ளவராகத் திகழ்ந்தார். கிராம அபிவிருத்தியில் தென்மராட்சியிலுள்ள 60 கிராம உத்தியோகத்தர் பிரிவு தோறும் 60 கிராம அபிவிருத்திச் சங்கங்களையும், மாதர் அபிவிருத்திச் சங்கங்களையும் திறன் மிக்கவையாக இயங்க வைத்து, அவற்றிற்குச் சிறந்த வழிகாட்டியாக இருந்து தன்னை முழுமையாக அர்ப்பணித்த புருஷர் ஆவார் அன்னார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, எங்கோ கல்வி கற்று, இறைவனின் பணிப்பிற்கிணங்க தென்மராட்சியில் சேவையாற்றிய பொற்காலத்தை பொன்னெழுத்தால் குறிப்பிட விரும்புகின்றேன். ஆரம்பத்தில் "ஆத்மஜோதி ஐயா" நா.முத்தையா அவர்கள் ஆரம்பித்து தொடர்ந்து நடாத்திய பாத யாத்திரைகளில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பங்குபற்றலை ஏனைய கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நலன் விரும்பிகள் யாவருடன் இணைந்து சிறப்பாகச் செய்தார்.

அதன் பின் ஏற்பட்ட நடவடிக்கைகள் நிமித்தம் இடம்பெயர்ந்து தென்மராட்சிக்கு வந்த மக்களைத் தங்க வைத்து, அவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றைய நிறுவனங்களோடு இணைந்து செயலாற்றி, அன்றைய பணிகள் யாவும் சிறப்புற கிராம உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைந்து ஆற்றினார். 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29, 30ஆம் திகதிகளில் சரித்திரம் காணாத எண்ணிக்கையில் அல்லலுற்று வந்த மக்களை தென்மராட்சி மக்களுடன் ஒன்று சேர்ந்து செய்த பணியை நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

1997ஆம் ஆண்டுகளின் பின் 4 மாதர் அபிவிருத்திச் சங்கங் களுக்கு UNHCR நுண் கருத்திட்டங்களுக்கான நிதியை, அதன் நிறுவனம், அப்போது சேவையாற்றிய அரசாங்க அதிபர் திரு.செ.பத்மநாதன் அவர்களுடைய உதவியுடன் சுய வேலை வாய்ப்பிற்காக உறுப்பினர்களுக்கு வழங்கி பின்னர் அவற்றை அறவீடு செய்து வேறு உறுப்பினர்களுக்கு வழங்கி ஊக்குவித்து தெரிவு தொடக்கம் கண்காணித்து சிறப்புடன் செய்தமையில் இவரின் பங்கு அளப்பரியது. இன்று அந்த நிறுவனங்களின் நிதிநிலைமை சிறப்புடன் காணப்படுகிறது.

இதனைவிடக் காலத்திற்குக் காலம் பல சந்தர்ப்பங்களில் சங்கங்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட ஊக்குவித்ததோடு சிறப்புற இயங்குவதற்கு இரவு பகலாகத் தன்னை அர்ப்பணித்தமையை மறக்க முடியாது. இச்சங்கங்கள் இன்றும் சிறப்பாக இயங்குகின்றனவென்றால் அன்னாரின் வழிகாட்டலே காரணமாகவுள்ளது.

அவர் இன்று பிரிந்தமையால் கவலை அடைந்த அவரின் வாழ்க்கைத்துணைவி, பிள்ளைகள் மற்றும் உறவினருக்கு யானும் எனது மனைவியும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்க விரும்பு கின்றோம். இச்சமயத்தில் சிவவாக்கியர் சித்தர் அவர்களின் பாடல் மூலம் நாம் இறந்த பின் எம் ஆன்மாக்கள் எங்கே போகின்றன என்பதை அறியலாம்.

"ஆவதும் பரத்துள்ளே அழிவதும் பரத்துள்ளே
போவதும் பரத்துள்ளே புகுவதும் பரத்துள்ளே
தேவரும் பரத்துள்ளே திசைகளும் பரத்துள்ளே
யாவரும் பரத்துள்ளே யானும் பரத்துள்ளே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே குறிப்பிடப்படுவது பரம் உள்ளே என்பது. வெட்டவெளி / அருள்வெளி / இருள்வெளி / சிலவெளி எல்லாம் ஒன்றே. இது ஒரு பெரிய இடம். ஊசலாடிக்கொண்டே உள்ளது. உலக வாழ்க்கை முடிந்த பின் போகும் இடமும் அந்த வெட்ட வெளியே. தூங்கும் போதும் உணராமல் அந்த வெளியில் தான் தூங்குகின்றோம். நாம் அமைக்கும் (வாழும்போது) வீடும் வெட்ட வெளியில் செங்கல் / கல்லால் அமைக் கின்றோம். தேவர் என்பது மேலானவர்கள். திசைகள் என்பது கோள்களும் மண்டலங்களும். கடைசியாகத் தானும் செல்லும் இடம் வெட்ட வெளியே என்று குறிப்பிடுகின்றார்.

**பு.சுந்தரம்பிள்ளை**
**இளைப்பாறிய உதவி அரச அதிபர்,**
**அதன் பின் பிரதேச செயலர்,**
**கடைசியாக யாழ் மாவட்ட**
**புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வீரராக வாழ்ந்து காட்டியவர்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

இக்குறளுக்கேற்ப வாழ்ந்தவர்தான் அமரர் வை.இராஜராஜேஸ்வரன். அவர் மிகவும் எளிமையானவர். யாரும் உதவி என்று கேட்டால் எப்பாடு பட்டாயினும் செய்து முடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதனால் சகல அரச சேவை கருமங்களை சரியாகச் செய்யக்கூடியவராக இருந்தார்.

எங்கள் நிறுவனத்தில் காசாளராக இருந்த வேளையில் மிகவும் நேர்மையாகவும் உண்மையாகவும் சேவை செய்தவர். தனக்கெனக் கொடுக்கப்பட்ட வேலைகளைத் தவிர மற்றவர்களுக்கு உதவி செய்வதில் முன்னின்றவர். எங்கள் நிறுவனத்தில் அவர் சேவை யாற்றிய காலப் பகுதியில் முதலாவதாக வந்து கடைசியாகச் செல்பவர். நிறைய நண்பர்களைச் சம்பாதித்தவர். செல்லும் இடமெல்லாம் எல்லோருடைய நட்பையும் பெற்றுக்கொண்டு சகல காரியங்களையும் சுலபமாகச் சாதித்துக்கொள்ளும் திறமை இராஜராஜேஸ்வரனுக்கு இருந்தது.

தனது குடும்பத்தின் மீது மிக்க பற்றும் பாசமும் வைத்திருந்தவர். சக ஊழியர்களுடன் மிக நட்புடனும் பாசத்துடனும் பழகியவர். இந்தக் காலகட்டத்தில் எல்லோருடனும் ஒற்றுமையாகவும் நட்புடனும் வாழ்ந்த திரு.வையாபுரி இராஜராஜேஸ்வரனின் மறைவு எமது நிறுவனத்திற்கு மட்டுமல்ல தனிப்பட்ட ரீதியில் எம் அனைவருக்கும் மிகப்பெரிய இழப்பாகும். அவரின் இடத்தை நிரப்புவதற்கு இனி யாராலும் முடியாது. அன்னாரின் ஆன்மா இறைவன் திருப்பாதத்தை அடைந்து சாந்தி பெறப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**V.மகாதேவன்**
**மற்றும் பிரமிட் எயார் சேர்விஸ் ஊழியர்கள்,**
**கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “அன்பான நண்பனுக்குப் புகழாரம்”

1982இல் பிரதேச செயலகம் யாழ்ப்பாணத்தில் உத்தியோக பூர்வமாக இருவரும் சந்தித்தோம். அரச அதிபர் மாமனிதன் கா.மாணிக்கவாசகர் ஐயாவுடன் இருவரும் சங்கமம். அன்று தொட்டு ஏதோ ஒரு பூர்வீக உறவு. இருவரையும் ஒன்று சேர்த்தார் மாணிக்கவாசகர் ஐயா. "STAR, COMBINATION WITH STAFF OFFICERS" அதிஸ்டம் பெரிய மகானுக்குக் கீழ் இருவரும் வேலை. யாழ். பிராந்தியம் - மாணிக்கவாசகர் ஐயாவின் ஆட்சி. நாம் இருவரும் உயர்பதவி, யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தோம்.

அமரர் இராஜராஜேஸ்வரன் அண்ணா ஓர் வெளிக்கள உத்தியோகத்தர் (R.D.O). ஆயினும் பிரதேச செயலகம் G.A இன் தலைமையில் மேற்பார்வையாளராகவும், நிரந்தர காரியதரிசியாகவும் கடமையாற்றினார். இராஜராஜேஸ்வரன் அண்ணா ஒரு FAST MOVING PERSON. ஆனால் வஞ்சகம் அற்றவர்.

எமது குடும்பத்துடன் சகோதரமாகப் பழகியவர். பல இன்ப துன்பங்களில் பங்கு கொண்டவர். பல துன்பங்களில் எனக்குத் தோள் கொடுத்தவர். ஆளுமைக்கு ஒரு ஆசான். சட்டத்தரணியின் பலம் இவருக்கு உண்டு. ஒன்றுக்கும் பயப்படமாட்டார். நேரிய வழி.

“கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே
சங்கு சுட்டாலும் வெண்மை தரும்”

வஞ்சகமற்ற மனிதன் இராஜராஜேஸ்வரன் அண்ணா மறைந்து விட்டார். தாங்க முடியாமல் வருந்துகின்றேன். பலவீனமடைந் துள்ளேன். நண்பனைத் தேடி அலைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண விதியிலிருந்து யாரும் தப்ப முடியாது. இது நியதி. ஆயினும், அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

**செ.சிவராமலிங்கம்**
**ஓய்வு பெற்ற தலைமை எழுதுவினைஞன்**
**பிரதேச செயலகம்,**
**கட்டிடங்கள் திணைக்களம்,**
**யாழ்ப்பாணம், சுண்டிக்குளி.**

---

- உயர்ந்த உன்னதமான கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிறந்தவன் நீ என்று எப்பொழுதும் எண்ணு.
- தன்னுடைய மனதைக் கட்டுப்படுத்தி தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ளும் ஆற்றலைப் பெற்றவன் விரும்பக்கூடிய எல்லாவற்றையும் அடைந்துவிடுவான்.
- அவசரமாக தவறு செய்வதை விடத் தாமதமாகச் சரியாகச் செய்வதே மேல்.
- உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதை இழக்கும் வரை அதன் மதிப்புத் தெரிவதில்லை.
- மற்றவர்களின் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி அடையாத வனால் நற்செயல்களைச் செய்ய இயலாது.
- நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு, நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
- மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகிவிடும்.
- நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைவீரன் இராஜராஜேஸ்வரன்

மனிதப்பிறவி அரிது அரிது
மானுடம் அதில் விசித்திரம் பல
ஒப்பற்ற தனிப்பிறவிகளுள்
தப்பற்ற செயல்வீரன் இராஜ
இராஜேஸ்வரன்
வல்லவர் நல்லவர் நாடறிந்த
நற்பணிகள் செய்தவர் இவரது
ஆற்றல் ஆளுமை வீரம்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
செயற்திறம் மன வைராக்கியம்
யாவும் கொடையே!
ஓயாது உழைத்து உடல்
சாயும் வரை இல்லறப்
பணிகள் இனிதே முடித்து
ஆற்றலும் ஆர்வமும் ஆளுமையும்
திட்டமிட்ட வாழ்க்கையும்
தட்டிக் கழிக்காத உதவியும்
தகுதியெனக் கண்டவருடன்
ஏற்படுத்திக்கொண்ட நட்பும்
அன்பும் என்றும் மறக்க முடியாது
இவ்வுலக வாழ்வை நிறைவாக வாழ்ந்து
அவ்வுலகம் தேடிச் சென்றார்
அவரது ஆன்மா இறைநிலையில்
சாந்தி பெறுக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திருமதி.வை.கணேசபிள்ளை (ஆசிரியை)**
**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி யென்செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங்கலையின் எழுத்த றிவித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத் தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முகதூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசெனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுங் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே!

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லிங்காஷ்டகம்

## ராகம் : யமுனா கல்யானி

தாளம் : ஆதி (அ) ராகமலிகை



ப்ரம்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித ஸோபித லிங்கம்
ஜன்மஜ து:க விநாஸக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காமதஹம கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனகாமஹாமணி பூஜித லிங்கம்
பணிபதி வேஷ்டித ஸோபித லிங்கம்
தக்ஷ்ஸுயக்ஞ விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுஸோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாஸன லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபி பிரவேச லிங்கம்
தினகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகமிதம் புண்யம் ஜத் படேச்சிவ ஸந்நிதோ
ஸிவலோகம வாப்ரோதி ஸிவேன ஸஹமோததே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த

# சிவபுராணம்

### திருப்பெருந்துறையில் அருளியது



தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

**கலிவெண்பா**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!

வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி;
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி;
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி;
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி;
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி;

ஆராத இன்பம் அருளுமலைபோற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த், தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு...

- *நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்துவிடு.*
- *உன் நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும் அதைக் குறித்து நீ கவலைப்படாதே. இலட்சியத்தைப் பற்றிக் கொண்டு முன்னேறிக்கொண்டே இரு.*
- *உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி.*
- *மலை போன்ற சகிப்புத்தன்மை, இடைவிடாத முயற்சி, எல்லையற்ற நம்பிக்கை; இவைதாம் நற்காரியத்தில் வெற்றி தரும்.*
- *நம்பிக்கை, நம்பிக்கை; நம்மிடத்தில் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை - இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும்.*
- *அடிமைகளின் குணமாகிய பொறாமையை முதலில் அழித்துவிடு.*

- சுவாமி விவேகானந்தர்

- *வானத்தைப் பாருங்கள்; நாம் தனித்து இல்லை. இந்தப் பிரபஞ்சம் முழுவதும் நம்மிடம் நட்பாக உள்ளது. கனவு காண்பவர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் மட்டுமே அது சிறந்தவற்றை வழங்குகின்றது.*
- *அழகைப் பற்றிக் கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையைப் பாழாக்கிவிடும். கடமையைப் பற்றிக் கனவு காணுங்கள். அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்.*
- *முடியாத விடயங்கள் குறித்துக் கனவு காண்பவர்களே அவற்றை வெற்றி கொள்ள முடியும்.*

- அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுத வாக்கு

- உலகில் மக்கள் செய்யும் பிழைகளுக்கெல்லாம் தலையாய பிழை அறிவு நூல்களைக் கற்காமல் இருப்பதே ஆகும். அதனால், நல்ல நூல்களை வாசிப்பதை அன்றாடப் பணியாக்கிக் கொள்ளுங்கள்.

- மனிதனை உயர்த்துவது பணமன்று; பதவியன்று; குலமன்று; பருமன் அன்று; உயரம் அன்று; அறிவு ஒன்று தான் மனிதனை உயர்த்தவல்லது.

- ஆண்டவனுக்கு பணக்காரன், இல்லாதவன் என்ற பேதங்கள் சிறிதும் கிடையாது. இறைவனின் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற உணர்வோடு வழிபாடு செய்யுங்கள்.

- குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் தினமும் ஒன்றுகூடி, காலை அல்லது மாலை நேரத்தில் வழிபாடு செய்வதால் குடும்பத்தில் அமைதியும், அருளும் தழைக்கும்.

- இனிமையான சொற்களைப் பேசுபவர்களுக்கு உலகில் எந்தத் துன்பமும் இல்லை. எமவாதனை உண்டாகாது. அவர் இருக்கும் இடத்தில் அருள் துலங்கும்.

- நாம் எந்தப் பாவத்தைச் செய்தாலும் தெய்வத்திடம் மன்னிப்புப் பெற்றுவிடலாம். ஆனால், நன்றி மறந்த பாவத்தை தெய்வம் ஒரு போதும் மன்னிக்காது.

- அன்பு ஒன்றே அனைத்தையும் வெல்லும் சிறந்த மனிதப் பண்பு.

- எமக்கு என்ன நல்ல விடயங்கள் தெரியும் என்பதை விட, எமக்கு என்ன நல்ல விடயங்கள் தெரியாது என்பதைத் தேடுங்கள். இன்னும் நல்லவர்களாகப் பிரகாசிப்பீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

* சின்னத்தம்பி (பிறவுண்)
(யா/மத்திய கல்லூரி 1ஆவது அதிபர்)
+
* வள்ளியம்மை (சண்முகம் மகள்)
↓
* வேலுப்பிள்ளை
+
* சிவக்கொழுந்து
↓
* ஓங்காரவடிவேல்
+
* காவேரியம்மா
↓
* வையாபுரி
+

* சேதுபதிஅம்மா
↓
* **இராஜராஜேஸ்வரன்**
+
ஜெகதீஸ்வரி
↓

- இந்திரஜித் (பொதுச்சுகாதாரப் பரிசோதகர்) + மங்களேஸ்வரி
  ↓ மதுராங்கி, சங்கீர்த்தனன்
- கஜேந்திரஜித் (லீலா எக்ஸ்போட் மேற்பார்வையாளர்) + சியாமளா
  ↓ சாம்பவி + நிருபன்; சஞ்ஜேய்
- பிறிந்தா + நகுலேஸ்வரன்(Dr) (மனநல வைத்திய நிபுணர். லண்டன்)
  ↓ அபிஷேக், அப்சரா

* பாக்கியம்
↓
இராஜராஜேஸ்வரி
+
Dr.கல்வளைராஜன்
↓

- கபிலன் வில்லவராஜன் + நிரோஜா
- அனந்தி + கிருஷான்

* அமரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

# நன்றி நவிலல்

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்தபோது நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் வேறு வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் மற்றும் எமது குடும்பத்தலைவர் நோயுற்று இருந்தபோது சிறந்த வைத்திய சேவையை வழங்கிய வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு இன்றைய வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் இந்த நினைவு மலரை அச்சிட்டுத் தந்த அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,

**குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட...

**குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க:**

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள். (Loose Talk)
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள். (Diplomacy) விட்டுங்கொடுங்கள். (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Tolerance)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும் அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள். (Flexibility)
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல நடந்துகொள்ளாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள்.

Sudarnilavu, 0776687443

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org